பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 06 | செவ்வாய்க்கிழமை | 18.02.2025 | அதிர்வு 200

## கிணற்றில் வீழ்ந்து 3 வயது குழந்தையும் தாய் மாமனும் மரணம்

**வட்டுக்கோட்டையில் துயரம்**

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வட்டுக்கோட்டையில் கிணற்றில் தவறி வீழ்ந்து 3 வயது ஆண் 06



# குட்டித் தேர்தல் சட்டமூலம் விசேட பெரும்பான்மையுடன் ஏகமனதாக நிறைவேற்றம்!

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் விசேட பெரும்பான்மையுடன் திருத்தங்கள் ஏதுமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்துக்கு எதிராக எவரும் வாக்களிக்கவில்லை.

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டமூலத்தை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் சந்திம அபேரத்ன, முதலாம் வாசிப்புக்காக கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி சபைக்குச் சமர்ப்பித்திருந்தார். 06

## அநுர அரசின் வரவு - செலவுத் திட்டம்:

# இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று ஆரம்பம்



2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு – செலவுத் திட்ட உரை) நிதி அமைச்சர் என்ற ரீதியில்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்று திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு வரவு – செலவுத் திட்டத்துடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்திலிருந்து பாரம்பரியத்துக்கு அமைய படைக்கல சேவிதர் அழைத்துவர சபா மண்டபத்துக்குள் வருகை தந்தார்.

இதனைத் தொடர்ந்து 06




யுத்தம் முடிவடைந்த பின்னரான கடந்த 16 ஆண்டு கால தமிழ்த் தேசிய அரசியல் போக்குக் குறித்து எனக்கு ஓர்ஆதங்கம் இருந்து வந்தது.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நிற்கின்ற பல அரசியல் கட்சிகள் தமிழர்கள் மத்தியில் இருந்தாலும் கூட – செயற்பட்டாலும் கூட – தமிழ்த் தேசத்தின் அரசியல் பற்றிய முடிவுகளை எடுப்பவர்கள் பெரும்பாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இருந்து வந்தார்கள்.

அதுவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் காலத்தில், எம்.பிக்களான கூட்டமைப்புத் தலைவர்கள் சிலரும் அந்தந்தக் காலத்தில் எம்.பிக்களாக இருக்கும் கூட்டமைப்பினரும்தான் தீர்மானங்களை எடுப்பவர்களாகவும், தமிழ்த் தேசிய அரசியலின் செல்நெறியைத் தீர்மானிப்பவர்களாகவும் இருந்து வந்தார்கள். கட்சிகளின் பங்களிப்பு நேரடியாகப் பெருமளவில் இருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் இருப்பவர்களின் முடிவுகளே கட்சிகளின் முடிவுகளாகவும் கருதப்பட்டு வந்தன. அதனால் கட்சித் தொண்டர்களின் பங்களிப்பும், 06

# சட்டத்தரணி சங்க தேர்தலை தடுக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிப்பு

நாளை நடைபெறவுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தலுக்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு கொழும்பு மாவட்ட பிரதம நீதிபதி சந்துன் விதானவினால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் உறுப்பினர் சட்டத்தரணி எமலியா லிலந்தி டி சில்வாவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தலைவர் பதவிக்காக போட்டியிடும் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய, சட்டத்தரணி கலாநிதி சுனில் அபேரத்ன, சட்டத்தரணிகள் சங்கத்தின் தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தலைவர் பதவிக்காக வேட்புமனு கையளித்துள்ள ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட தேர்தலில் இருந்து விலகியுள்ள நிலையில் எஞ்சியுள்ள 2 வேட்பாளர்களுடன் மாத்திரம் தேர்தலை நடத்துவது சங்கத்தின் யாப்பிற்கு முரணானது என மனுதாரர் சார்பில் மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய விடயங்களை முன்வைத்தார்.

வேட்புமனுவை மீளப்பெறுவது என்பது வேட்பாளர் ஒருவரின் மரணத்தின் போது ஏற்படுகின்ற நடைமுறைக்கு சமமானது எனவும் சங்கத்தின் யாப்பிற்கமைய வேட்பாளரொருவர் மரணித்த பின்னர் மீண்டும் வேட்புமனு கோரப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்தார்.

அத்துடன், மீண்டும் வேட்புமனு கோரி தேர்தலை நடத்துவதற்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய மன்றில் கோரினார்.

யாப்பிற்கமையவே சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தல் நடத்தப்படுவதாகவும் அனுர மத்தேகொட தமது விருப்பத்திற்கமைய தேர்தலில் இருந்து விலகியுள்ளதாகவும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணிகளான அலி சப்ரி, இக்ராம் மொஹமட், சாலிய பீரிஸ், சட்டத்தரணி திஷ்ய வேரகொட மற்றும் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க ஆகியோர் குறிப்பிட்டனர்.

அனுர மெத்தெகொட சுய விருப்பத்தின் அடிப்படையில் தேர்தலில் இருந்து விலகியுள்ளதால் அதனை மரணத்துடன் ஒப்பிட முடியாதுள்ளதாகவும் சட்டத்தரணிகள் கூறினர்.


இதனால், சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தலை நடத்துவது சட்டபூர்வமானது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இருதரப்பினராலும் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மாவட்ட பிரதான நீதிபதி வெற்றி பெறக்கூடிய வழக்கொன்றை மனுதாரர் தொடுக்கவில்லை என தெரிவித்தார்.

9 நாள்களுக்கு முன்னதாக ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தகொட சமூக ஊடகங்கள் மூலம் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்ததாகவும் இவ்வாறான பின்னணியில் இந்த முறைப்பாட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு 9 நாள்கள் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் நீதிபதி சுட்டிக்காட்டினார்.

முறைப்பாட்டாளரின் கோரிக்கையை நிராகரித்த நீதிபதி எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

# 5 மாகாணங்களுக்கு வெப்ப எச்சரிக்கை




நாட்டின் சில மாகாணங்களுக்கு வெப்பமான வானிலை தொடர்பில் எச்சரிக்கை அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில இடங்களிலும் வெப்பச்சுட்டெண் அதாவது மனித உடலில் உணரப்படும் வெப்பத்தின் அளவு கவனம் செலுத்தவேண்டிய மட்டத்தில் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் அதிக வெப்பமான வானிலை நிலவும் காலப்பகுதியில் போதுமானளவு குடிநீரை பருகுமாறும் நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனைத்தவிர குழந்தைகள், முதியோர் மற்றும் நோயாளர்கள் இது தொடர்பில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.











# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராகப் போராடும் பத்துப் பிரமுகர்களுக்கு எதிராக நேற்றுத் தடை உத்தரவு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டம் ஒன்று இடம் பெறலாம் என்ற அடிப்படையில. – இதனால் பொதுமக்களுக்கு இடையூறு, நஷ்டம், தொந்தரவு ஏற்படலாம் என்ற வகையில் மன்னார் பொலிஸாரால் முன் வைக்கப்பட்ட தடை உத்தரவு கோரிக்கைக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை மாலை தடை உத்தரவுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனிய மணல் அகழ்வு மேற்கொள்வதற்கான அனுமதி வழங்குவது தொடர்பாக அரச திணைக்கள அதிகாரிகள் ஆய்வு செய்வதற்காக இரு முறை மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்த நிலையில் இரு முறையும் மக்களின் ஒன்றிணைந்த எதிர்ப்பால் அரச திணைக்களங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத் தரப்புகளைச் சேர்ந்தோர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மீண்டும் மேற்படி அரச திணைக்களங்கள் மற்றும் ஒரியன் மினரல் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆய்வுக்காக மன்னார் ஓலைத்தொடுவாய் மற்றும் தோட்டவெளி பகுதிக்கு வருகை தர உள்ள நிலையில் பொதுமக்கள் அணி திரண்டு போராட்டம் மேற்கொள்ள உள்ளனர் எனொ பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.


அதன் அடிப்படையில் போராட்ட காரர்கள் என அடையாளப்படுத்தி சிலரின் பெயர்களை குறிப்பிட்டு பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் பொலிஸார் தடையுத்தரவைப் பெற்றுள்ளனர்.

இந்தத் தடை உத்தரவானது சட்டத்தரணி செல்வராஜ் டினேசன், அருட்தந்தை மார்கஸ் அடிகளார் உள்ளடங்கலாக 10 பேருக்கு எதிராகப் பெறப்பட்டுள்ளது.

தடை உத்தரவின் கீழ் மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டம் மேற்கொள்ளாமல் இருத்தல் வேண்டும். எந்தப் பொது சொத்துக்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்த கூடாது. மிக முக்கியமாக மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஒரியன் மினரல் நிறுவனத்தின் செயல்பாட்டுக்கும் இடையூறு ஏற்படுத்தக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நீதிமன்றக் கட்டளை நேற்று திங்கட்கிழமை 17 ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 14 நாள்களுக்கு வலுவுள்ளதாகக் காணப்படும் எனக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கையின் போது மன்னார் மக்களுக்கு விருப்பம் இல்லாத கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பகிரங்கமாக தெரிவித்த நிலையில் அவர் ஜனாதிபதியாகி ஒரு வருட காலப்பகுதிக்குள்


2025.02.17

AK 1336/2024

106 (1)

1.

2.

3.

105 (5)

14

Sup.Num.Addl.Magistrate, Mannar

கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கான கூர்ப்பு அறிக்கையை தயார் செய்வதற்காக இரண்டாவது முறை அரச திணைக்களங்கள் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக நிந்தவூரில் கண்டன ஆர்ப்பாட்டம்

(தில்சாத் பர்வீஸ், பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் தொழில் பயிற்சி நிலையத்தின் கீழ் பணிபுரியும் தமிழ் மொழி மூலம் போதனா ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நிந்தவூரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்ட ஒன்றினைந்த சுதந்திர தொழில்சங்க மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் தொழில் பயிற்சி நிலையத்தின் முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் டி. வினோதராஜாவை இடமாற்றக் கோரி அம்பாறை மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தின் கீழ் பணிபுரியும் போதனா ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். அம்பாறை மாவட்டம் பிரதிப் பணிப்பாளர் தம்மீது அடக்குமுறையை மேற்கொள்கின்றார் எனவும் அவர் மீது குற்றம் சுமத்தினர்.

இதுதொடர்பாக நாம் அம்பாறை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் டி.வினோதராஜாவை தொடர்பு கொண்டு வினவியபோது "கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாத சில ஆசிரியர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டமையால் அத்தகைய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது" என அவர் சுட்டிக்காட்டினார்.














# மின் கம்பத்துடன் மோதிய மோ. சைக்கிள்: ஒருவர் உயிரிழப்பு; மற்றொருவர் படுகாயம்!

## வவுனியா - மன்னார் வீதியில் நேற்று மாலை சம்பவம்

(கி.வசந்தன்)

வவுனியா – மன்னார் வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார் என பூவரசன்குளம் பொலிஸெ தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

மன்னார், பறயநாலங்குளம் பகுதியில் இருந்து இரண்டு இளைஞர்கள் வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். வவுனியா – மன்னார் வீதியில் உள்ள பம்பைமடுவை அண்டிய பகுதியில் மோட்டர் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளதுடன், அதில் பயணித்த மற்றைய நபர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அநுராதபுரம் பகுதியை சேர்ந்த நிமல் வயது 35 என்ற நபரே மரணமடைந்தார். விபத்துச் சம்பவம் தொடர்பாக பூவரசன்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர்களின் கருத்து நிலைப்பாடுகளின் உள்வாங்கலும் இடம்பெறாமல் இருந்தனையை விசனத்துடன் அவதானிந்து வந்தோம்.

ஆனால் இப்போது நிலைமை மாறி இருக்கின்றது. நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் என்ன செய்தாலும், அதற்கு வெளியில் கட்சி அரசியல் ஜரூராக - குறிப்பிடத்தக்களவு பங்களிப்போடு - நடைபெறுவதாகத் தோன்றுகின்றது.

தமிழரசுக் கட்சியில் கூட முன்னர் இடம்பெறாத அளவுக்கு இப்போது கட்சியின் மத்திய குழுக் கூட்டங்கள், அரசியல் குழுக் கூட்டங்கள் எல்லாம் தாராளமாகவும், பல தரப்பினரின் கருத்துக்களையும் உள்வாங்கி தீர்மானம் எடுக்கும் போக்கிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு நல்ல சமிக்ஞையாகவே தோன்றுகின்றது.

\+ \+ \+

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பை சுமந்திரன் நேற்று முன்தினம் ஏற்றுக் கொண்டமையை அடுத்து பல தரப்புகளிலிருந்தும் அவருக்கு வாழ்த்துக்கள் கிட்டி வருவதாகத் தெரிய வருகின்றது.

இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை கூட தாமே தொலைபேசி அழைப்பு எடுத்து, சுமந்திரனைப் பாராட்டி வாழ்த்தினார் என அறிய வந்தது.

தென்னிலங்கையிலும் அரசுப் பக்கத்தில் இருந்தும் எதிர்க்கட்சிகள் பக்கத்தில் இருந்தும் மற்றும் கொழும்பில் இராஜதந்திரிகள் மட்டத்திலிருந்தும் சுமந்திரனுக்கு வாழ்த்துக்கள் கிட்டி வருவதாகத் தெரிகிறது.

இந்தத் தொடர்பாடல் - தமிழரசுக் கட்சியில் சுமந்திரனின் பங்களிப்பு கணிசமாக உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதான நிலைப்பாடு - இனப்பிரச்சினை தீர்வுக்கான முன்நகர்வில் காத்திரமாகப் பங்களிக்கக் கூடும்.

\+ \+ \+

தமிழரசுக் கட்சியின் இதற்கு முந்திய மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைமைப் பொறுப்பு சி.வி.கே.சிவஞானத்தின் கைகளுக்கு மாறியது. அப்போது தலைமைப் பதவியை இழந்த மாவை சேனாதிராஜாவுக்காகக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தவர்கள், அந்தப் பொறுப்பு சிவஞானத்துக்குப் போகின்றமையை சகித்துக் கொள்ள முடியாமல், 'அவருக்கு வழங்கப்படுவது தலைவர் பதவியல்ல, பதில் தலைவர் பதவிதான்' என்று திரும்பத் திரும்பக் கூறி, அதை மத்திய குழு கூட்டத்தில் தமது கருத்தாக பதிவு செய்வதிலும் முனைப்பாக நின்றனர்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது சும்மாவா கூறப்பட்டது?

நேற்று முன்தினம் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கடைசி நேரத்தில் கட்சியின் பொதுச்செயலாளராக சுமந்திரன் நியமனமான போது, அதைச் சகிக்க முடியாத சில தரப்புகள் திடீரென புதிய யோசனை ஒன்றை முன் வைத்தனர்.

சி.வி.கே.சிவஞானம் தலைவர் ஆகி விட்டமையினால் அவர் இதுவரை பதவி வகித்த சிரேஷ்ட துணைத் தலைவர் பதவி வறிதாகி இருக்கின்றது என்றும், அந்த இடத்துக்கு சிறிதரனை நியமிக்கலாம் என்றும் அவர்கள் யோசனை கூறப் புறப்பட்டனர். சிறிதரனின் பக்கத்தில் அவரது ஆதரவாளராக இருக்கும் சிறிநேசன் எம்.பிதான் இந்தக் கருத்தை முன் வைத்தார். அதற்கு சடாரென பதிலளித்தார் சிவஞானம்.

"அதுதான் எனது நியமனத்தின் போது 'பதில் தலைவர்', 'பதில் தலைவர்' என்று உறுதியாகக் கூறினீர்கள். நான் பதில் தலைவர் என்றால் அது பதில் கடமையாற்றும் பதவி. கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான நான் அந்தப் பதவியில் இருந்தபடி தலைமை பதவியை பதில் தரப்பாக ஆற்றுகிறேன் என்பதுதான் கருத்து. உங்களது நிலைப்பாடு. அப்படியாயின் நான் இன்னமும் சிரேஷ்ட உப தலைவர் பதவியையும் வைத்திருக்கிறேன், அந்தப் பதவியில் இருந்து கொண்டுதான் பதில் தலைவர் பதவியை ஆற்றுகிறேன். ஆகவே சிரேஷ்ட உப தலைவர் பதவி வறிதாகவில்லை. அதில் நான் இன்னமும் இருக்கிறேன். ஆகவே அந்த இடத்துக்கு இன்னொருவரை நியமிக்க முடியாது." - என்று நெற்றிப் பொட்டில் அடித்தால் போல் பதிலளித்தார் சி.வி.கே.சிவஞானம் எனத் தெரிகிறது.

நேரத்திற்கு ஏற்ற மாதிரி பேசினால் அப்படித்தான் விபரீதம் நெற்றி முட்ட நேரடியாக வரும் என்று நினைக்கிறேன்.

---

## இரண்டாம் வாசிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிற்பகல் 1.15 மணி வரை ஜனாதிபதி வரவு - செலவுத் திட்ட உரையை நிகழ்த்தினார்.

இதற்கு அமைய 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் இன்று 18 ஆம் திகதி முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை (22ஆம் திகதி சனிக்கிழமை) உள்ளடங்கலாக ஏழு நாட்கள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் எதிர்வரும் 25ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

---

## கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குழந்தையும் தாய் மாமனும் உயிரிழந்தனர்.

வட்டுக்கோட்டை - சங்கரத்தை - திக்கிராய் குளத்தின் அருகிலுள்ள கிணற்றிலேயே இருவரும் தவறி வீழ்ந்து உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு - விசுவமடு - ரெட்பானாவைச் சேர்ந்த தனுசன் டனுசன் (வயது 3) என்ற ஆண் குழந்தையும். அவரின் தாய் மாமனான வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த பெருமாள் மகிந்தன் (வயது 30) என்பவருமே உயிரிழந்தனர்.

கிணற்றில் குழந்தை மிதப்பதை அவதானித்த அந்தப் பகுதியினர் குழந்தையை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். எனினும், குழந்தை உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை விசாரித்த பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று கிணற்றிலிருந்து குழந்தையின் தாய் மாமனை மீட்டனர். அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்து விட்டார் என்று கூறப்பட்டது.

இருவரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## குட்டித்தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் கோரப்பட்டு பிற்போடப்பட்டுள்ள நிலையில், அந்தச் சபைகள் தொடர்பில் புதிய வேட்புமனுக்களைக் கோருவதற்காகவும், தேர்தலை நடத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புப்பட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்காக உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தைச் சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை அறிவிப்பதற்காக நாடாளுமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை (14) கூடியது. இதன் போது சபாநாயகர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபைக்கு அறிவித்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் "சட்டமூலம் முழுமையாகவும் மற்றும் குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் வாசகங்கள் அரசமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று நீதியரசர்கள் குழாமில் பெரும்பான்மையினராகிய இரண்டு நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

நீதியரசர் குழாமில் மீதமுள்ள ஒரு நீதியரசர், சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசமைப்புடன் முரண்படவில்லை என்பதால் அதனை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையொன்றினால் நிறைவேற்ற முடியும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைகள் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி முதல் பிற்பகல் 7 மணி வரை நடைபெற்றது. அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ வாக்கெடுப்பு கோரினார்.

அதற்கமைய இரண்டாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 187 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன் எதிராக எந்த வாக்குகளும் அளிக்கப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து குழுநிலையில் சட்டமூலம் கருத்திற்கொள்ளப்பட்டதுடன், அதன் பின்னர் சட்டமூலத்துக்கான மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 158 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன் எதிராக எந்த வாக்குகளும் அளிக்கப்படவில்லை.

அதற்கமைய, உள்ளூராட்சி சபைகள் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மற்றும் மூன்றாம் மதிப்பீடு விசேட பெரும்பான்மையுடன் திருத்தங்கள் ஏதுமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



# மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் நீதியரசர் மொஹமட் லபார் தாஹிரின் பதவி நீடிப்பு

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் நீதியரசர் மொஹமட் லபார் தாஹிரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் மொஹமட் லபார் தாஹிர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.





# கோதுமை மா விலை 10 ரூபாவால் குறைப்பு

கோதுமை மாவின் விலை குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று முதல் அமுலாகும் வகையில் இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போராட்ட உரித்து

மக்களின் போராட்ட உரிமை - உரித்து - தொடர்பில் சட்டத்தின் வலிமையான ஆதரவை - வலியுறுத்தலை - பொலிஸாருக்கும் நீதித்துறையினருக்கும் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் விரிவாக எடுத்துரைத்திருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

மக்களின் போராட்ட உரிமையை மறுக்கும் விதத்தில் பொலிஸார் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு கண்மூடித்தனமாக தடை உத்தரவுகளை வழங்கும் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறையினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் இந்த சட்ட வியாக்கியான ஆலோசனையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

2022ஆம் ஆண்டு ஏப்ரலில் - மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் - மட்டக்களப்பு செயலக வாயிலை மறித்துப் போராட்டம் நடத்திய மக்களுக்கு எதிரான வழக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரினால் தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டு வருகின்ற பின்னணியில், நேற்று ஒரு நகர்த்தல் பத்திரம் மூலம் அந்த வழக்கை நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வந்து வாதங்களை முன்வைத்திருக்கிறார் சுமந்திரன்.

அரசுக்கு எதிராக தேவைப்படும் சமயங்களில் பொதுமக்கள் போராட்டம் நடத்துவது என்பது அவர்களது உரிமை மட்டுமல்ல, அவர்களது ஜனநாயகக் கடமையும் கூட என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், அது தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள பல தீர்ப்புகளையும் சுட்டிக்காட்டி உள்ளார்.

இத்தகைய வழக்குகளில் குற்றச்சாட்டு சுமத்துவதற்கு பொலிஸாருக்கு வழமையாக 15 நாள்கள் வழங்கப்படுகின்றது. மேலதிகமாக இன்னும் 15 நாள்கள் எடுக்கலாம் என்று சட்டத்தில் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், 30 நாள்களுக்குள் முடிக்க வேண்டிய இந்த வழக்குகளை மூன்று வருடங்கள் கடந்தும் இன்னமும் குற்றச்சாட்டு யாது என்று தெரியாமல் பொலிஸார் இழுத்தடிப்பது ஏற்புடையது அல்ல, அது அபத்தப் போக்கு என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, இப்படி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியமை மூலமே இன்று அரசாங்கத்திற்கு வந்திருக்கும் ஆட்சியாளர்கள், அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், மக்களின் அத்தகைய போராட்ட உரிமையை - அதன் தாற்பரியத்தை - அதன் விளக்கத்தை - இப்போது அந்தப் போராட்டங்கள் மூலம் அதிகாரத்துக்கு வந்திருக்கும் ஆட்சியாளர்களிடம் பொலிஸார் போய் கேட்டு படித்துக்கொண்டு வரவேண்டும் என்றும் விநயமாக வேண்டியிருக்கிறார்.

சமூகஊடகங்களின்வளர்ச்சிகாரணமாக மக்களுக்கிடையிலான ஊடாட்டங்களும் தொடர்பாடல்களும் வேகமாகவும் துரிதமாகவும் காத்திரமாகவும் மேற்கொள்ளக் கூடிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இதனால் மக்கள் தங்கள் உரித்துக்களை - உரிமைகளை - நிலைநாட்டுவதற்காக விரைந்து ஒன்று கூடி தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வருகின்றனர். தேவைப்படும் சமயங்களில் அப்படி ஆளும் தரப்புக்கு எதிராக மக்கள் ஒன்றுபட்டுத் தங்கள் எதிர்ப்பை தெரிவிப்பது என்பது அவர்களது உரிமை மட்டுமல்ல, அது அவர்களின் ஜனநாயகக் கடமையும் கூட என்பதை ஆட்சியாளர்களும் பொலிஸாரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அமைதிக்குப் பங்கம் என்ற பெயரில் மக்களின் போராட்ட உரித்தை, நீதிமன்றங்களின் பாராமுகமான போக்கைப் பயன்படுத்தி பொலிஸார் பறிப்பது ஒரு வகையில் ஜனநாயக விரோத நடவடிக்கையாகும்.

மக்கள் போராட்டங்களுக்கு எதிராக எடுத்த எடுப்பில் கண்மூடித்தனமாக தடை விதிக்கும் போக்கு நீதிமன்றங்களினால் ஆரம்பத்தில் தாராளமாக பின்பற்றப்பட்ட போதிலும், இப்போது நீதிமன்றங்கள் இது விடயத்தில் சற்று அவதானமாகவும் சிரத்தையாகவும் இருப்பதைக் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆயினும் கூட, பொலிஸ் தரப்பின் பொறுப்பற்ற போக்கால் மக்கள் உரித்தை - அவர்களின் ஜனநாயக கடப்பாட்டை - பறிக்கும் விதத்தில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதற்கு இடம் அளிக்காமல் நீதிமன்றங்கள் அவதானமாக செயல்பட வேண்டும். இது ஜனநாயகத்தை மேலும் செழுமைப்படுத்தும் விடயத்தில் நீதிமன்றங்களின் பிரதான கடப்பாடாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



# ஜல்லிக் கட்டுப் போட்டியில் காளை முட்டி 59 பேர் காயம்

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே தவசிமடை பகுதியில் புனித அந்தோணியார் சர்ச் திருவிழாவை முன்னிட்டு நடந்த ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகள் முட்டியதில் 59 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து காளைகள் அழைத்து வரப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த போட்டியில் 725 காளைகளும், 350 மாடு பிடி வீரர்களும் கலந்து கொண்டிருந்தன எனவும் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற வீரர்களுக்கும் காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசு பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை இப்போட்டியில் கலந்து கொண்ட வீரர்களில் 59 பேர் காளைகள் முட்டியதில் காயமடைந்துள்ளனர் எனவும் அவர்கள் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டிக்காக 300 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# திவ்யா சத்யராஜுக்கு தி.மு.கவில் முக்கிய பொறுப்பு



தி.மு.கவில் இணைந்த திவ்யா சத்யராஜுக்கு தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் பொறுப்பு தரப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்ட அறிவிப்பில், தி.மு.க. சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவராக டி.பி.எம்.மைதீன்கான், சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் வி.ஜோசப்ராஜ் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணைத் தலைவராக வும், சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைச் செய லாளராக கே.அன்வர் அலி ஆகியோர் நியமிக்கப்படு கின்றனர்.

கோவை செல்வராஜ் மறைந்ததால், தி.மு.க. செய்தித் தொடர்பு துணைச் செயலாளராக சூர்யா கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட தமிழ் பொன்னிக்கு பதிலாக திவ்யா சத்யராஜ் நியமிக்கப்படுகிறார் என தெரி வித்துள்ளார்.

திவ்யா சத்யராஜ் கடந்த மாதம் தி.மு.கவில் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


# டில்லியை தொடர்ந்து பீகாரில் நில அதிர்வு



டில்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று அதி காலை நில அதிர்வு ஏற்பட்டிருந்த நிலையில், நேற்று காலை பீகார் மாநிலத்திலும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வு 4.0 ரிக்டர் அளவில் பதிவாகி உள் ளது.

நேற்று காலை 8.02 மணியளவில் பீகார் மாநிலத்தின் சிவான் பகுதியில் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக இந்தியாவின் நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.





# ரஷ்யாவுடன் இடம்பெற்ற போரில் 46,000 உக்ரைனிய வீரர்கள் பலி

கடந்த 2022 ஆம் ஆண்டு ரஷ்யாவின் முழு அளவிலான போர் தொடங்கியதிலிருந்து 46,000 இற்கும் மேற்பட்ட உக்ரைனிய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் அல்லது சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போரினால் எத்தனை உக்ரைனியர்கள் தங்கள் உயிர்களை இழந்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

எங்களுக்கு ஒரு நிலையான எண்ணிக்கையிலான இழப்புகள் உள்ளன. 46,000 வீரர்கள் போர்க்களத்தில் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் போரில் கொல்லப்பட்டு அல்லது சிறைபிடிக்கப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளனர். அவர்களை பற்றி நீங்கள் உறுதியாக அறிய முடியாது, ஏனென்றால் போரில் காணாமல் போனவர்கள் இறந்திருக்கலாம் அல்லது அவர்கள் சிறைபிடிக்கப்பட்டிருக்கலாம்.

சுமார் 19,500 உக்ரைனிய குழந்தைகள் ரஷ்யாவிற்கு நாடு கடத்தப்பட்டனர்.

உக்ரைனின் தற்காலிகமாக ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை – ஆயிரக்கணக்கா, பல்லாயிரக்கணக்கா என்பது எங்களுக்குத் தெரியாது,

பெப்ரவரி 4 அன்று, ரஷ்யாவிற்கு எதிரான போரில் 45,100 உக்ரைனிய வீரர்கள் கொல்லப்பட்டனர். 390,000 இராணுவ வீரர்கள் காயமடைந்தனர்.” என்றார்.

# உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்யத் தயார்

## பிரித்தானியப் பிரதமர் தெரிவிப்பு

சமாதானத்தின் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உக்ரைனில் தங்களது துருப்புக்களைக் களத்தில் நிறுத்துவதற்கும் தயாராக இருப்பதாக பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டாமர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் உக்ரைனில் நீடித்த அமைதியை நிலைநிறுத்துவது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பியத் தலைவர்களுடன் இடம்பெற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னதாக பிரித்தானியப் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தத்திற்குப் பின்னர் யுக்ரைனை பாதுகாப்பதில் பிரித்தானியத் துருப்புகள் ஈடுபட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த வார இறுதியில் பிரித்தானியப் பிரதமர் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை செயல்படுத்துவதற்கு தயங்காது

## ஈரானின் வெளியுறவு அமைச்சகம் அறிவிப்பு

ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை பாதுகாத்து வருவதாகவும், அதனை தொடர்ந்து செயல்படுத்த தயங்காது என்றும் ஈரானின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பகாயி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரானின் அணுசக்தி குறிக்கோளை எதிர்ப்பதாக தெரிவித்த அடுத்த நாள் குறித்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, நிச்சயமாக இந்த விடயத்தில் தாங்கள் எந்த பலவீனத்தையும் காட்ட மாட்டோம் எனவும் எஸ்மாயில் பகாயி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரானின் அணுசக்தி குறிக்கோளையும் மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கையும் முறியடிக்க உறுதியாக உள்ளதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஜெருசலேமில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோவை சந்தித்த பின்னர் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்றையதினம் இதனை கூறியுள்ளார்.

இதன்போது, கருத்த தெரிவித்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர், ஒவ்வொரு பயங்கரவாதக் குழுவின் பின்னாலும், ஒவ்வொரு வன்முறைச் செயலுக்கும், இந்தப் பிராந்தியத்தை தாயகமாகக் கொண்ட மில்லியன் கணக்கான மக்களின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அச்சுறுத்தும் அனைத்திற்கும் பின்னால் ஈரான் உள்ளதாக தெரிவித்துள்ளார்.





# வவுனியாவில் வாய்க்காலில் மரம் நட்டு ஆக்கிரமித்து வலை வேலி அமைத்துள்ள உதவிப் பிரதேச செயலர்

(வவுனியா நிருபர்)

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வாய்க்காலை ஆக்கிரமித்து மரம் நட்டு, வலை வேலி அமைத்து, அந்த வாய்க்கால் காணியை உதவிப் பிரதேச செயலாளர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளார் எனப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் - வேப்பங்குளம் பிரதான வீதியில் வசிக்கும் உதவிப் பிரதேச செயலாளர் ஒருவர், தனது மதில் ஓரமாக செல்லும் வாய்காலில் நீண்ட காலத்திற்கு முன்னர் மரம் நட்டுள்ளார். மரங்கள் வளர்ந்த நிலையில் தற்போது அம் மரங்களை மறைத்து வலையினால் வேலி அமைத்து வாய்க்காலை ஆக்கிரமித்துள்ளார்.

உக்குளாங்குளம் மற்றும் 60 ஏக்கர் பகுதியில் இருந்து வழிந்து ஓடும் நீரானது இந்த வாய்கால் ஊடாகவே தட்சணாங் குளத்திற்கு செல்கின்றது. இவ் வாய்க்காலே தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாத்துறை வருமானம் 34.5 சதவீதமாக அதிகரிப்பு




கடந்த வருடத்துடன், ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானம் 34.5 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த ஜனவரி மாதத்தில் 362.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானமானது 269.3 மில்லியன் டொலர்களாக பதிவாகியிருந்தது.

அதேநேரம் 2024 ஆம் ஆண்டில் மொத்தமாக 3.17 பில்லியன் அமெரிக்க டொலர் சுற்றுலா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

இது முந்தைய ஆண்டில் பதிவான 2.07 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது 53.2 சதவீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் 44 நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.

அதற்கமைய, கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 19.9 சதவீதம் அதிகரித்து 3,67,804 ஆகப் பதிவாகியுள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.



கி.வசந்தரூபன்

# 77 ஆவது சுதந்திர தினமும் தமிழ் மக்களது நிலையும்...!

இலங்கைத் தீவு பிரித்தானிய ஏகாதிபத்தியத் திடம் இருந்து சுதந்திரம் பெற்று 77 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. ஆனாலும் இலங்கைத் தீவில் இனங்களுக்களுக்கிடையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத நிலையிலேயே உள்ளது. இதன் காரணமாகவே ஒரு பகுதியினர் சுதந்திர தினம் கொண்டாட்டத்தில் ஈடுபட, இன்னொரு பகுதியி னர் அதனை தமது கரிநாளாக அனுஷ்டித்து வரு கின்றனர். காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து பேசுகின்ற போதும் அது குறித்து ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுப்பவர்களாக இல்லை. தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசி வரும் கருத்துகளும் அவ்வாறே வெற்று வார்த்தைகளுடன் முடிந்து விடுமா என்ற கேள்வியும் பாதிக்கப்பட்ட மக்களிடம் உள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வீதிக்கு மக்கள் இறங்கியமையால் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலகியிருந்தார். அதன் தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க தற்காலிக ஜனாதிபதியாக பதவி யேற்று, பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும் பான்மையினரின் ஆதரவுடன் ஜனாதிபதி யானார்.



அவர் பதவிக்கு வந்ததும் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக் கொண்டமையுடன், 75 ஆவது சுதந்திர தினத் திற்கு முன்பாக அப் பிரச்சினைகளைத் தீர்ப்பேன் எனவும் அனைவரும் இணைந்து அந்த சுதந்திர தினத்தைக் கொண்டாட எதிர்பார்த்திருக்கின்றார் எனவும் கூறியிருந்ததார்.

அதன் ஒரு கட்டமாக சர்வகட்சி சந்திப்புகள், தமிழ் கட்சி பிரதிநிதிகளுடனான சந்திப்புகள் என்பன நடந்தன. ஆனால் தீர்க்கமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. சுதந்திர தினத்திற்கு முன்னதாக பிரச்சினைக்கு தீர்வு என்பது வெறும் சந்திப்புகளுடன் நிறைவுக்கு வந்திருந்தது. 75 ஆவது சுதந்திர தினமும் கடந்து தற்போது 77 ஆவது சுதந்திர தினமும் முடிவடைந்துள்ளது.

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினம் காலி முகத்திடலில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தலைமையில் எளிமையாக இடம்பெற்றிருந்தது. இதன்போது தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டது. நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தேவையற்ற செலவுகளை தவிர்த்து, அரசியல்வாதிகளின் தலை யீடு இன்றி, மாவட்ட செயலகங்களில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. சில தமிழர் பகுதி களில் இராணுவப் புலனாய்வு பிரிவின் ஆதர




தொடர்ச்சி ▼

# 77 ஆவது சுதந்திர தினமும்
# தமிழ் மக்களது நிலையும்...!



தொடர்ச்சி ▲

வுடன் வாகனப் பேரணிகளும் கடந்த ஆண்டைப் போன்று இடம்பெற்றிருந்தன.

வடக்கு – கிழக்கு தமிழர் பகுதிகளில் தமிழ் மக்களின் உரிமைக் குரலை வெளிப்படுத்தி சுதந்திர தினத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றிருந்தன.

பல்வேறு அச்சுறுத்தல்கள், அடக்கு முறைகளுக்கு மத்தியில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது. கிளிநொச்சியிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தை கரிநாளாகஓ பிரகடனப்படுத்தி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இவை தவிர, யாழ் பல்கலையில் ஏற்றப்பட்ட தேசியக் கொடி இறக்கப்பட்டு கறுப்புக் கொடி ஏற்றப்பட்டு மாணவர்கள் சுதந்திர தினம் எமக்கு கரிநாள் எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் முகமாக புலம் பெயர் தேசங்களிலும் இலங்கைத் தூதரகங்கள் முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடந்திருந்தன. சுதந்திர தினத்தில் தெற்கில் இடம்பெற்ற கொண்டாட்டங்களும் வடக்கு – கிழக்கில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களும் இந்த நாட்டில் இன்னும் இரு வேறு தேசங்களாக மக்கள் வாழ்ந்து வருவதையே படம்போட்டு காட்டுகின்றன. இந்த நிலையை இன்னும் தென்னிலங்கை உணராமைக்கு காரணம் என்ன...?

யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள போதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படவில்லை. அந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நல்லெண்ண முயற்சிகள் கூட முழுமனத்துடன் இடம்பெற்றன எனத் தெரியவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அப்பால் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, காணி விடுவிப்பு எனத் தமிழ் மக்கள் முன் ஏராளம் பிரச்சினைகள் உள்ளன. சர்வதேச ரீதியில் ஏற்படும் நெருக்கடியைத் தணிப்பதற்கும், ஐ.நாவின் அழுத்தத்தை குறைப்பதற்காகவும் அவ்வப்போது ஒரு சில காணி விடுவிப்புக்களும், ஒரு சில கைதிகளின் விடுதலையும் இடம்பெற்றாலும் கூட அவை திருப்தியைத் தருவனவாக அமையவில்லை. தற்போதைய அரசாங்கத் தரப்பு முதல் முறையாக ஆட்சிக்கு வந்துள்ளது. கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக கடும் போக்குடன் செயற்பட்ட இந்த அணி தற்போது தேசிய மக்கள சக்தி என்ற புதிய முகமூடியுடன் தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது. அந்த முகமூடியை நிரந்தரமாக அணிந்து மக்களது பிரச்சினைகளை இவர்கள் தீர்ப்பார்களா என்பதே தமிழ் மக்களின் கேள்வியாகும்.



பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க அனைவரும் ஒன்றுபட்ட செயலாற்ற வேண்டிய நிலையில் கூட தமது நாட்டில் வாழும் இன்னொரு தேசிய இனத்திற்கு தமக்கு இருப்பது போன்றசுதந்திரத்தையும்,சமத்துவத்தையும்கொடுப்பதற்கு இன்னமும் தென்னிலங்கை முன்வரவில்லை என்பது மிகவும் வேதனையான விடயம்.

இந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவிடத்து இந்த நாடு இன்னும் பாதாளத்தை நோக்கியே செல்லும் என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணரவேண்டும். கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தமே இந்த நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கு முக்கிய காரணம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அவ்வாறான துன்பியல் போக்கு இந்த நாட்டில் மீள நிகழாமையை உறுப்படுத்த வேண்டும். இதனை அனைத்து சமூகமும் ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலமே 78 ஆவது சுதந்திர தினத்தை என்றாலும் எல்லோரும் ஒரு தாய் மக்களாக – ஒருவர் தோளில் ஒருவர் கைகோர்த்து – கொண்டாட முடியும். அதுவே இந்த நாட்டின் உண்மையான சுதந்திர தினமாகவும் அமையும் என்பதே உண்மை.

# வட்டுவாகல் பாலத்திற்கு நூறு கோடி ரூபா ஒதுக்கீடு முல்லை மக்களின் நீண்டகால பிரச்சினைக்குத் தீர்வு

## மகிழ்ச்சி தெரிவிக்கின்றார் ரவிகரன் எம்.பி.



(பா.சதீசன்)

முல்லைத்தீவு – வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப்பணியினை ஆரம்பிப்பதற்கு 2025ஆம் ஆண்டிற்குரிய வரவு – செலவுத்திட்டத்தில் நூறு கோடி ரூபா நிதி ஆரம்பக் கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போதே இவ்விடயத்தை அறிவித்துள்ளார்.

இந்நிலையில் தமது அயராத தொடர் முயற்சியால் முல்லைத்தீவு மக்களின் நீண்டகால பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமது தொடர்ச்சியான கோரிக்கையை ஏற்று வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணத்திற்கான நிதியை இவ்வருட வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கியதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும், கூட்டுறவுப் பிரதி அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவருமான உபாலி சமரசிங்கவுக்கும் முல்லைத்தீவு மக்களின் சார்பாக தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருகையில் –

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் அமைக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார்.

அந்தவகையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம்திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வெள்ளஅனர்த்தம் தொடர்பான விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இந்த வட்டுவாகல் பாலம் அமைக்கப்படவேண்டுமென கூட்டுறவுப் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் வலியுறுத்தினார். அந்தக் கூட்டத்தின் பின்னர் பிரதி அமைச்சர் மற்றும் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், அனைவரையும் நேரடியாக வட்டுவாகல் பாலம் அமைந்துள்ள பகுதிக்கு அழைத்துச் சென்று மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து இடர்பாடுகள் குறித்தும் நேரடியாகக் காண்பித்திருந்தார்.

அதன்பின்னர் கடந்தவருடம் டிசம்பர். மாதம் 04ஆம் திகதி நாடாறுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தனது நாடாளுமன்ற முதல் உரையில் வட்டுவாகல் பாலம் அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியமையுடன், அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார். இதன்போது வட்டுவாகல் பாலம் அமைப்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுமென ஜனாதிபதியும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பில் வட்டுவாகல் பாலம் அமைப்பதற்கு 2025ஆம் ஆண்டிற்கான வரவ. –செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுமென அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் உறுதியளித்திருந்தார்.

இத்தகைய சூழலிலேயே நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வரவு –செலவுத்திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும்போது வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு நூறு கோடி நிதி ஒதுக்கப்படுவதாக அறிவித்திருக்கின்றார்.

# தலவாக்கலையில் கால்நடை பண்ணை ஒன்றில் ஏழு ஆடுகளும், வளர்ப்பு நாயும் மர்மமாக மரணம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)





தலவாக்கலை ஹொலிரூட் ரத்னில்கல வீடமைப்பு திட்டத்திலுள்ள கால்நடை பண்ணையொன்றில் 7 ஆடுகளும், வளர்ப்பு நாயொன்றும் திடீரென உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தலவாக்கலை கால்நடை வைத்திய அலுவலகம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நேற்று முன் தினம் தனது பண்ணையில் நான்கு ஆடுகள் உயிரிழந்தன எனவும், நேற்று மேலும் மூன்று ஆடுகள் உயிரிழந்துள்ளன எனவும் அந்தப் பண்ணையின் உரிமையாளர் ரொபர்ட் தெரிவித்தார். மேலும் அவர் வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்ட நாயும் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆடுகள் வைக்கப்பட்டிருந்த பண்ணையின் பின்பகுதி இடிக்கப்பட்டுள்ளதாகவும், சில குழுவினரோ அல்லது நபர்களோ கால்நடைகளுக்கு விஷத்தை கொடுத்திருக்கலாம் என சந்தேகிக்கின்றார் எனவும் பண்ணையின் உரிமையாளர் ரொபர்ட் தெரிவிக்கின்றார். இவ்வாறு உயிரிழந்த மூன்று ஆடுகள் நேற்று பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றுன் உடல் பாகங்கள் மேலதிக விசாரணைக்காக நுவரெலியா மற்றும் பேராதனை கால்நடை மருத்துவப் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என தலவாக்கலை கால்நடை வைத்திய அலுவலகத்தின் கால்நடை வைத்திய அதிகாரி சுரேஷ் குமார் தெரிவித்தார்.

அந்த நிறுவனங்கள் நடத்தும் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தேவை ஏற்படின் கால்நடைகளின் சம்பந்தப்பட்ட பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை மேலதிக பரிசோதனைகளுக்காக அரச இரசாயன பரிசோதனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கால்நடை வைத்திய அதிகாரி சுரேஷ்குமார் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.




# உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைத் தற்காலிகமாக நேற்று இடைநிறுத்திக் கொண்ட முன்னாள் போராளி

(பா.சதீசன்)

முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவர் பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீதி கிடைக்கும் வரை சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நேற்றில் இருந்து அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 14.02.2025 காலை 7 மணிக்கு, அழகரெத்தினம் வனகுலராசா என்ற ஒரு காலினை இழந்த முன்னாள் போராளி ஒருவர் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற வளாகத்தில் நீர் மற்றும் உணவு இல்லாமல், நீதி கிடைக்கும் வரை உண்ணாவிரத போராட்டத்தை 10 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து, இலங்கை மற்றும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆரம்பித்தார். நான்காவது நாளான நேற்று மக்கள், வடகிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக் கைக்கு அமைவாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தற்காலிகமாக அவர் இடைநிறுத்தியுள்ளார்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்திற் கான தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் தன்னுடன் இணைந்து பொதுமக் களும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவது எனக் கடிதம் மூலம் எழுதி தெரிவித்ததனையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது.



அவரின் உடல்நலம் பாதிக்கப்பட்டி ருப்பதனால் அம்புலன்ஸ் மூலம் முல லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவரின் போராட்டத்திற்கான கோரிக்கைகள் வருமாறு:-

- தமிழர்களுக்கு தனி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்
- வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோருக்கு உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும்.
- மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் உடனடியாக அகற்றப் பட வேண்டும்.
- தமிழினத் துரோகிகள் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்.
- உணவு மற்றும் அத்தியாவசியப் பொருடள்களின் விலைகள் குறைக் கப்பட்டு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்
- பிரதேசவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.
- தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பில் இல்லாதவர்கள் இருந்ததாக கூறி, வெளிநாடு மற்றும் உள் நாட்டில் சகபோராளிகளை காரணம் காட்டி பணம் வசூலித்து, போராளி களை ஏமாற்றி, சுற்றுலா விடுதி, தோட்டம், பண்ணை அமைத்து, வேலை செய்யும் பணியாளர்க ளுக்கு சரியான சம்பளம் வழங் காமல் இருப்பதை நிறுத்தி, அவர்களுக்கு ஒருமணிநேரத்திற்கு 200 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.
- முதியோர் மற்றும் இளையோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- காணி மற்றும் வீடு இல்லாதவர்க ளுக்கு காணி, வீடு வழங்கப்பட வேண்டும்.
- இலங்கையில் பிச்சை எடுப்பவர் களின் வீதம் அதிகரித்துள்ளதால், பிச்சை எடுப்பவர்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும்.

- என 10 கோரிக்கைகளை முன் வைத்தே போராட்டத்தை அவர் ஆரம் பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# நாடாளுமன்ற, மாகாண சபைத் தேர்தல் முறையை உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் பின்பற்றுங்கள்!

## நேற்று நாடாளுமன்றத்தில் சிறிதரன் எம்.பி. வலியுறுத்து




(ந.லோகதயாளன்)

நாடாளுமன்றம், மாகாண சபைகளில் பின்பற்றப்படும் விதி ஏன் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மட்டும் பின்பற்றுவது கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்ட திருத்த மூலம் தொடர்பான விவாத்த்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

2023 மார்ச் 9ஆம் திகதி நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல் நீண்ட காலம் இழுபட்ட நிலையில் நீதிமன்றத் தீர்ப்போடு இன்று விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக 2023 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைமுறைக்கு வந்துள்ள அடிப்படையிலே இளைஞர்களுக்கான சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று பெண்களிற்கும் ஓர் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது இவை நல்ல விடயங்கள். ஆனால் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் உள்ள 60ற்கு 40 என்ற நடைமுறைகள் எப்மோழுதும் ஒரு சபையில் சரியான ஆட்சி முறையை ஏற்படுத்த முடியாத தொங்கு நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் இவ்வளவு வெற்றிகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி கட்சிகூட எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் ஓர் தொங்கு நிலையை அடைந்திருப்பதனைக் காணலாம். ஆகவே நடக்கப்போகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது வட்டாரங்களில் பெறுகின்ற பிரதிநிதிகளைவிட மேலதிக பிரதிநிதிகளும் தீர்மானிப்பதனால் இந்த நிலை தோன்றுகின்றது.

குறிப்பாக பூநகரி பிரதேச சபையில் 11 பேர் வட்டாரத்திலும் 9 பேர் மேலதிகமாகவும் நியமிக்கப்படுகின்றனர். அதாவது 20 பேர் வருகின்றனர். இங்கே பெரும்பாலான வட்டாரத்தை வென்ற கட்சி ஆட்சியை அமைக்க முடியாத சூழல் உருவாகின்றது. இது இந்த நாட்டிலே இருக்கிற மிகப் பெரும் குறைபாடு. அவற்றில் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கலாம். இது தொடர்பிலே பேசியிருக்கலாம். இதை நாம் பலமுறை சொல்லியும் அது தவிர்க்கப்பட்டுள்ளது. அதனால்தான் கேட்கின்றோம், வட்டாரத் தெரிவை 70 வீதமாகவும் விகிதாசாரத் தெரிவுக்கான மேலதிக ஆசணங்களை 30 வீதமாகவும் மாற்றியமைத்தால் அது நடைமுறைச் சாத்தியமானதாகியிருக்கும்.

இவ்வாறான திருத்தம் செய்ய முடியுமா, அதற்கு காலம் போதுமா? நீதிமன்றம் தந்த 3 மாதங்களிற்குள் தேர்தல் நடாத்த வேண்டும் என்ற முனைப்பு இருக்கின்றது. அதனை வர வேற்கின்றோம். ஆனால் க.பொ.த சாதாரணப் பரீட்சை, வரவு – செலவுத் திட்ட விவாதம், சமய தினங்கள், ஈஸ்டர் பண்டிகை எல்லாமே இக் காலத்திற்குள்தான் அடங்குகின்றன. இதற்குள் தேர்தல் பிரச்சாரப் பணியும் இடம்பெறப் போகின்றது. எனவே ஏப்பிரல் மாதம் என்பது ஒரு நெருக்கடியான காலமாகயிருக்கும். இந்த நெருக்கடிகளைப் பதிவு செய்கின்றோம். அரசாங்கம் அல்லது தேர்தல் திணைக்களம் தேர்தல் திகதிகளில் கொஞ்சம் பின் தள்ளிப் போவது பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாக பதிவு செய்கின்றேன்.

இதேநேரம் நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் 5 வீதத்திற்கும் குறைவான எண்ணிக்கை கொண்ட வாக்குகளை ஒரு கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ பெற்றிருந்தால் அவை கணக்கிடப்படுவதில்லை. ஆனால் உள்ளூராட்சியில் மட்டும் 5 வீதத்திற்கும் குறைவான எண்ணிக்கை கொண்ட வாக்குகளும் எண்ணப்பட்டுகின்றபொழுதே இந்த மேலதிக உறுப்பினர்கள் என்ற விடயம் உள்ளூராட்சி சபைகளில் பெரும் பிரச்சனைக்குரிய விடயமாக மாறுகின்றது.

இலங்கையில் நாடாளுமன்றம், மாகாண சபைகளில் உள்ள அந்த 5 வீத நடைமுறை என்பதை உள்ளூராட்சியில் அரசாங்கம் ஏன் பின் தள்ளி வைக்கின்றது? ஏன் அந்தத் திருத்தத்தை உங்களால் கொண்டு வர முடியாமல்போனது?

நீதிமன்றம் வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் காலமே 3 மாதமாக வரைறுத்துள்ளதே அன்றி தேர்தலை 3 மாதங்களிற்குள் நடாத்த வேண்டும் என்று கூறவில்லை. எனவே அதற்குப் பின்பும் அந்த நாள்கள் கொண்டு செல்ல முடியும். எனவே ஏன் இவ்வளவு தூரம் அவசரம்? – என்றார்.




# சர்வதேச நாணய நிதியத்தின் பணயக்கைதியாக ஜனாதிபதி

## பட்ஜெட் குறித்து கருத்தில் சஜித் தெரிவிப்பு

இந்த வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் நாடு சர்வதேச நாணய நிதியத்திற்கு அடிபணிந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்திருக்கின்றார்.

நேற்று முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்ட உரையையும், முன்னர் ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் முன்வைக்கப்பட்ட "வளமான நாடு – அழகான வாழ்க்கை" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இந்த வரவு – செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதிகள் எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை நாம் ஆராய வேண்டும். நாடு அநுரவிற்கு என்று அதிகாரத்தை வழங்கினாலும், நாடு சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் வரம்புகளுக்குட்பட்டு வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டமோ, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களின் கடன் பொறிக்கோ தீர்வுகள் இல்லை. விவசாயம், கடற்றொழில் துறை, தோட்டகைத்தொழில் துறையினர் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

புதிய கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்கு செல்வதாக ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தேர்தல் மேடையில் கூறியிருந்த போதும், அவர் நேரடியாகவே சர்வதேச நாணய நிதியத்தின் அடிச்சுவடுகளை பின்பற்றி வருகின்றார். ஆட்சிக்கு வந்ததும் நாணய நிதியத்தின் உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொள்வார் எனக் கூறினாலும், அதற்கு மாற்றமாகவே ஜனாதிபதி இந்த வரவு – செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இந்த வரவு – செலவுத் திட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஜனாதிபதி மக்கள் ஆணையை புறக்கணித்து சர்வதேச நாணய நிதியத்தின் பணயக்கைதியாக மாறியுள்ளார். இந்த வரவு – செலவுத் திட்ட உரையையும், தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அரச சேவையில் ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு தடவையும் சம்பள உயர்வு வழங்கப்படும் என்றனர். ஆனால் இறுதியில் 3 வருடங்களில் சொற்ப தொகையே சம்பளம் உயர்த்தப்படுகின்றது. இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு இது போதாது. தனியார் துறையினருக்கு மாற்றாந்தாய் கவனிப்பு வழங்கப்பட்டுள்ளது. – என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# சிவனடிபாத மலைக்கு வார இறுதியில் இரண்டு லட்சம் யாத்திரிகர்கள் வருகை

(மஸ்கெலியா நிருபர்)

கடந்த வார இறுதியில் சிவனடி பாத மலைக்கு இரண்டு லட்சம் யாத்திரிகர்கள் வருகை தந்து உள்ளனர் என்று நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஏ.எச். வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

யாத்திரிகர்கள் அதிக எண்ணிக்கையில் வருகின்றமையால் வாகனத் தரிப்பிடங்கள் நிரம்பிய நிலையில் மேலதிக வாகனங்கள் நல்லதண்ணி மறே நெடுஞ்சாலையிலும் நல்லதண்ணி மஸ்கெலியா பிரதான வீதியில் சுமார் நான்கு கிலோமீட்டர் தூரம் வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன.

அத்துடன் இரத்தினபுரி வழியாக அதிக அளவில் யாத்திரிகர்கள் வருகை தந்தமையால் மலை உச்சியில் பாரிய இட நெருக்கடி ஏற்பட்டது.

இதன் காரணமாக நல்லதண்ணி வழியில் சென்று கொண்டு இருந்த யாத்திரிகர்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. – எனத் தெரிவித்தார்.

இவ்வாறு வருகை தந்த அனைத்து யாத்திரிகர்களுக்கும் முழுமையாக பாதுகாப்பு வழங்க பட்டது என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.ஏ.எச.வீரசேகர மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் சிறுதானிய பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கக் காத்திரமான நடவடிக்கை

## மாகாண விவசாயப் பணிப்பாளர் விளக்கம்

(பிரபாகரன் டிலக்சன்)

வடக்கு மாகாணத்தில் சிறுதானிய விதைகள் கொள்வனவிற்காக 27 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் வடக்கு மாகாணத்தில் அண்ணளவாக 1,800 ஏக்கர் நிலப்பரப்பிலும் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் அண்ணளவாக 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள தீர்மானித்திருக்கின்றோம் என வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன் தெரிவித்தார்.




வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப் படவுள்ள சிறுதானியப் பயிர்ச்செய்கை தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெரும்போக நெல் அறுவடையைத் தொடர்ந்து சிறுதானிய பயிற்சியை ஊக்குவிக்கும் முகமாக பல திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம். நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடக்கூடிய விவசாயிகளுக்கான வருமானம் குறைவாக காணப்படுகின்றது.

எனவே அந்த விவசாயிகளினுடைய வருமானத்தை அதிகரிக்கும் முகமாக வயல்களில் எஞ்சியுள்ள நீரினை பயன்படுத்தி மிகவும் குறைந்த உற்பத்திச் செலவில் அதிக வருமானத்தை ஈட்டும் முகமாக பயறு, கடலை, கௌப்பி, உழுந்து, எள்ளு, நிலக்கடலை ஆகிய சிறுதானியத்தை பயிற்செய்கையை மேள்கொள்ளுமாறு ஊக்குவிக்கிறோம்.

சிறுதானிய விதைகளையும் அதற்கான இயந்திரங்களையும் மானிய விலையில் வழங்குவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். மேலும் கால்நடைகளை கட்டுப்படுத்தும் முகமாக முட்கம்பி வேலிகளை அமைப்பது தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் சிறுதானிய விதைகள் கொள்வனவிற்காக 27 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் வட மாகாணத்தில் 1,800ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

பாரம்பரிய சிறுதானியங்களான வரகு, தினை, குரக்கன் உள்ளிட்டவை பயிரிடுவது தற்போது அருகிவரும் நிலையில் அவற்றின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் திட்டங்களை வகுத்து வருகின்றோம். மேலும் பாரம்பரிய சிறுதானியங்களை சந்தைப்படுத்துவதற்கான முறைகளையும் அடையாளம் கண்டிருக்கின்றோம்.

கடந்த வருடத்தில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சிறுதானிய பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டியிருந்தனர். எனினும் இவ்வருடம் யாழ் மாவட்டத்தில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள தீர்மானித்திருக்கின்றோம்.

மேலும் நெல் உலர வைப்பதற்காக முன்னைய காலங்களில் பாரிய பொருள் செலவில் உலர் தளங்கள் அமைக்கப் பட்டன. எனினும் அவை போதுமான வையாக இல்லை. அதன் காரணமாக நெல்லை உலர வைப்பதற்காக தரமான படங்குகளை வழங்குவதெனத் திணைக்களத்தினால் முடிவெடுக்கப்பட்டது. அதற்குரிய நிதி ஒதுக்கீடுகளை இந்த வருடம் மேற்கொண்டுள்ளோம்.

மேலும் நெல்லை உலர வைப்பதற்கு மின் உலர்த்திகளை பயன்படுத்துவதற்கும் விவசாயிகளை ஊக்குவிக்கிறோம். வெளிநாட்டு நிதி உதவி திட்டங்கள் ஊடாக புதிய மின் நெல் உலர்த்திகளை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம்.

மேலும் எதிர்வரும் காலங்களில் வீதிகளில் நெல்லை உலர வைப்பதால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பிலும், வீதிகளில் எதுவிதமான சமிக்கைகளும் இல்லாமல் உழவு இயந்திரங்கள் நிறுத்தப்படுவது தொடர்பிலும் அந்தந்த திணைக்களங்கள் உரிய நடவடிக்கை எடுக்கும் என நாம் நம்புகின்றோம். – எனத் தெரிவித்தார்.

# வவுனியாவில் 15 வயது மாணவி குளிப்பதை வீடியோ எடுத்த இளம் குடும்பஸ்தர் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 15 வயது மாணவி ஒருவர் குளிப்பதை வீடியோ எடுத்தார் எனக் கூறப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் ஆலயம் ஒன்றின் கட்டுமாணப் பணி இடம்பெற்று வரும் நிலையில், அந்த ஆலயத்தில் மரவேலைகளில் ஈடுபட்ட 35 வயது இளம் குடும்பஸ்தர் ஒருவர் அயல் வீட்டில் உள்ள மாணவி தனது வீட்டில் குளித்து கொண்டிருக்கும் போது வேலியால் குறித்த பெண்ணை வீடியோ எடுத்தார் என வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.



முறைப்பாட்டையடுத்து 35 வயதுடைய இளம் குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டார். அவரது தொலைபேசி இரசாயன பகுபாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் அவர் முற்படுத்தப் படுவார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இராசபோசனம்

## ஊரெழுவில் நிகழ்ந்த சிறுதானியப் பொங்கல் விழா

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தைப்பொங்கல் விழாவை ஆண்டு-தோறும் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடிவருகிறது. இராசபோசனம் என்ற கருப்பொருளில் நடைபெறும் இச் சிறுதானியப் பொங்கல் விழா இம்முறை ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

வளர்பிறை சனசமூக நிலையத்தின் தலைவர் மு.ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந்தினர்களாகப் பசுமை இயக்கத்தின் கலை, இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை. சரவணன், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன் நாவலம்பதி ஞானவைரவர் ஆலயத்தின் தலைவர் இ.ராதா ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான உறியடியோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இச் சிறுதானியப் பொங்கல் விழாவில் சாமை மற்றும் வரகு அரிசிப் பொங்கல்களும் குரக்கன் கூழும் பரிமாறப்பட்டன. தமிழர்களின் உணவுப் பண்பாட்டில் சிறுதானியங்கள் அருகிவரும் நிலையில், மீளவும் அவற்றின் பயன்பாட்டை ஊக்கிவிக்கும் நோக்கிலேயே சிறுதானியப் பொங்கல்விழா தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் எழுச்சிபூர்வமாக் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.













# நெல் அறுவடை முடிவடையாத நிலையில் கைதடியில் கட்டாக்காலி மாடுகளின் படையெடுப்பினால் பாதிப்பு

(த.சுபேசன்)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப்பரப்பிற்குட்பட்ட தனங்கிளப்பு வயல் பகுதியில் நெல் அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்ற நிலையில் கட்டாக்காலி மாடுகளின் வருகை அதிகரித்திருப்பதால் விவசாயிகள் பெரும் பயிர் அழிவிற்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஏற்கனவே தொடர் மழை மற்றும் வெள்ளம் காரணமாக நெற் பயிர்கள் அழிவடைந்த நிலையில் விவசாயிகள் விளைந்த நெல்லை அறுவடை செய்து வருகின்றனர்.

இருப்பினும் கட்டாக்காலி மாடுகள் அறுவடை செய்யத் தயாராக இருக்கும் நெற் பயிர்களை அழித்து விடுகின்ற நிலை காணப்படுகின்றது.

தனங்கிளப்பு பிரதேசத்தில் இம்முறை நெல் விதைத்த காலம் தொடக்கம் கட்டாக்காலிகளின் அட்டகாசம் காணப்பட்ட நிலையில் அது தொடர்பான உரிய திணைக்களங்களிடம் முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப் படாமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தனங்கிளப்பில் நெல் அறுவடை நிறைவு பெற்றதும் சிறுதானியங்களை விதைத்து அதனூடாக இலாபம் அடையக்கூடிய ஈரளிப்பு வயல் நிலங்களில் உள்ள போதிலும் கட்டாக்காலிகளின் தொல்லையால் விவசாயிகள் சிறுதானியச் செய்கையை தவிர்த்து வருகின்றனர்.

அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற வயல் அறுவடை விழா ஒன்றில் கலந்து கொண்ட வடக்கு ஆளுநர் விவசாயிகள் சிறுதானியச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும், அதனூடாக இலாபத்தை ஈட்ட வேண்டும் எனக் கூறிச் சென்றிருந்த போதிலும் உரிய திணைக்களங்கள் கட்டாக்காலி மாடுகள் மற்றும் அதன் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பின்னடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 18.02.2025




இன்று உங்களுக்கு மறக்க முடியாத நாள். உங்கள் முயற்சி மூலம் இலக்குகளை அடைவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியைத் தரும்.

பணியிடத்தில் பாராட்டுகளைப் பெறுவீர்கள். உங்களுக்குள் காணப்படும் திறமைகளை பயன்படுத்தி உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். இன்று முதலீட்டுக்கான முயற்சிகளை எடுக்கலாம்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சில சவால்களை சந்திக்க நேரும். வெற்றி கிடைப்பதற்கு உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை. ஆன்மீக ஈடுபாடு உதவிகரமாக இருக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனை எப்படி சமாளிப்பது என்று உணர்ந்து சமாளிக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் ஈகோ காரணமாக மகிழ்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்த ஈகோவைக் கைவிடுங்கள்.

இன்று அதிக செலவினங்கள் ஏற்படும். கட்டுப்படுத்த முடியாத அளவில் இருப்பதன் காரணமாக பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் காதுகளில் ஏற்படும் பிரச்சினை உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று பொறுமையாக இருக்க வேண்டும். சமயோசிதமாக செயல்பட வேண்டும். அதிகமாக சிந்திப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று உங்கள் சக பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படும். எனவே தவறுகளை குறைத்து சிறப்பாக பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

பயணத்தின்போது பண இழப்புகள் ஏற்படலாம். பணத்தை கவனமாக கையாள வேண்டும். பணத்தை முறையாக பராமரிக்க தெரிந்து கொள்ளுங்கள்.

ஆரோக்கியத்தில் சற்றே பின்தங்கிய நிலை காணப்படும். உங்களுக்கு முதுகு வலி ஏற்படலாம்.




வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் உங்கள் கவனம் திசை திரும்பலாம். வாழ்க்கையில் யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்களை அமைதியாக வைத்துக்கொள்ளத் தெரிந்து கொள்ளுங்கள்.

பணியிடத்தில் நற்பெயரை எடுப்பீர்கள். பணியை எளிதாக முடிப்பீர்கள். பணியை விரும்பி செய்வீர்கள்.

உங்கள் துணையிடம் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

தேவையில்லாத செலவினங்களை எதிர்கொள்வீர்கள். உங்கள் செலவுகள் கட்டுபடுத்துங்கள்.

இன்று ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படும்.




இன்று சிறந்த நாளாக இருக்கும். நட்பான அணுகுமுறை தேவை. அது வாழ்க்கையின் நன்மைகளையும் தீமைகளையும் உணர வைக்கும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பணிகளை முடிக்க அவர்கள் தகுந்த நேரத்தில் ஆதரவு தருவார்கள்.

உங்கள் துணையுடன் பரஸ்பர அனுசரணை மூலம் உறவை வலுப்படுத்தலாம். உங்கள் நட்பான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். இன்று உற்சாகத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் ஆற்றும் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும். உங்களுக்கென ஒரு சிறப்பு அம்சத்தை உருவாக்கிக்கொண்டு முன்னேறுவீர்கள்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க திட்டமிட வேண்டும். கெட்ட பெயர் ஏற்படுத்தாத வகையில் பணியாற்றும் முறைகளில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நல்லுறவை பராமரிப்பீர்கள். இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் சிறந்த முறையில் பணம் சம்பாதிக்க முடியும் என்பதால் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களிடம் உள்ள பணம் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




கோவிலுக்கு செல்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கிக்கொள்ளலாம். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

வேலையில் காணப்படும் சுமை காரணமாக பதட்டமாக உணர்வீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணியில் தவறுகள் நேரலாம்.

உங்கள் உணர்ச்சிகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே மோதல் ஏற்படும்.

சிறிய அளவில் கடன்களை வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். உங்களுக்கென்று சிறிது பணத்தை வைத்துக்கொள்ள இது உதவும்.

கால் வலி அல்லது முதுகு வலி ஏற்படலாம். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் நாளை திட்டமிட வேண்டும். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டாம்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவீர்கள். உங்களின் யாதார்த்தமான அணுகுமுறை அதற்கு உதவும். குறிப்பிட நேரத்திற்கு முன்பே பணிகளை முடித்து விடுவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேற்பாடு ஏற்படும்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கால் வலி காணப்படலாம். உங்களை வருத்திக் கொள்ளாதீர்கள். முடிந்தவரை ஓய்வெடுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.02.2025




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். புதிய தொடர்புகள் உருவாகும். அவை உதவிகரமாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணியில் திருப்திகரமான நிலை இருக்கும். கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளைக் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். நீங்கள் உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு பணத்தை பயன்படுத்துவீர்கள்.




இன்று நம்பிக்கை குறைந்து காணப்படும். உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். திட்டமிட்டு செயல்களை ஆற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக் காது. நடுநிலையோடு காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமுடன் பழகவும்.

உங்களிடம் இன்று அனுசரிக்கும் போக்கு காணப் படாது. நீங்கள் இன்று மகிழ்ச்சியை தேடுவீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாக இருக்க இயலாது. உறவில் மகிழ்ச்சி நிலவ அன்பும் அனுசரணையும் தேவை.

இன்று அதிக பணம் சம்பாதிக்க முடியாது. உங்கள் வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

உங்களிடம் கவலை தரும் வகையில் சில பதட்டங்கள் காணப்படும். மற்றபடி ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நேர்மறை எண்ணத்தோடு இருந்தால் ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதக மாக இருக்கும். உங்களுடைய இனி மையான பேச்சின் மூலம் பிறரைக் கவர்வீர்கள். உங்கள் மனதில் நம் பிக்கையான எண்ணங்கள் ஏற்படும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். திட்டமிட்டப்படி பணிகள் சிறப்பாக நடக்கும். இதன் காரணமாக நீங்கள் உற் சாகமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான நிலை காணப்படும். உங்கள் துணையுடன் இணைந்து விருந் துக்கு ஏற்பாடுகள் செய்வீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை புதிய முதலீடுகளை செய்வதற்கு பயன்படுத்தலாம்.

இன்று உற்சாகம், உறுதி மற்றும் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று பதற்றம் காணப்படும். மனதை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வைத் துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் சிறப்பான வேலையை வழங்குவீர்கள். நீங்கள் தன்னிச்சையாக இயங்கி பணியாற்றுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்களின் உள்ளத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தி உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யுங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள். இதனால் குழப்பமான மன நிலையில் காணப்படுவீர்கள்.

வருத்தம் மற்றும் அசௌகரியம் காரணமாக கால் களில் வலி காணப்படும்.

# காப்பகங்களில் உள்ள பெண் பிள்ளைகள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றார்களாம்

## மானிப்பாயில் பிரதமர் முன்னால் அமைச்சர் சந்திரசேகர் அதிர்ச்சித் தகவல்

(பிரபாகரன் டிலக்சன்)

காப்பகங்களில் உள்ள பெண் பிள்ளை கள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற னர் எனவும், இதற்கென சில நிறுவனங் கள் இயங்குகின்றன என்சவும், பெண் பிள்ளைகளை காப்பாற்றுமாறு காப்பகத் தில் இருந்து அம்மா ஒருவர் அண்மையில் தன்னிடம் கூறினார் எனவுன் கடற் தொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரி வித்தார்.

கடந்த சனிக்கிழமை பிரதமர் முன்னி லையில் இடம்பெற்ற மானிப்பாய் கூட்டத் தில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிலேயே கடந்த 76 வருடங்களாக ஆட்சி செய்தவர்கள் எதையும் செய்ய வில்லை. பிறக்கும் ஒவ்வொரு குழந்தை யும் 16 லட்சம் ரூபா கடனோடு பிறக்கின் றது. எமது நாடு பொருளாதார ரீதியாக வீழ்த்தப்பட்டிருக்கின்றது. சட்டைப் பொத் தானைக் கூட வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற நிலைமையே காணப்படுகின்றது.

எல்லா வளங்களும் நிறைந்த நாடாக இலங்கையை காணப்படினும் அரிசி, தேங்காய், உப்பு, கருவாடு போன்ற



அத்தியாவசிய பொருள்களைக் கூட வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது. இந்த நிலை யிலிருந்து மீளவேண்டும்.

கிளின் சிறிலங்கா வேலைத்திட்டத் தின் ஊடாக வறுமையை ஒழிப்பதற்கும், நாட்டை டிஜிட்டல் பயப்படுத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளோம். கிராமங்களை ே நாக்கி நிதிப் பாய்ச்சலை செய்து மக்க ளின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற வேண்டும்.

வறுமையின் காரணமாக பல குடும்பங் கள்கல்வியைத்தொடரமுடியாதநிலைமை காணப்படுகின்றது. வறுமைக் கோட்டிற் குள் கீழ் வாழும் குடும்பங்களில் போதைப் பொருள், வாள்வெட்டு கலாச்சாரம் போன்ற துர் நடத்தைகள் அதிகரித்திருக் கின்றன. இதிலிருந்து எங்கள் நாட்டை மீட்டெடுக்க வேண்டும்.

பெண்கள் தனியாக நடமாட முடியாத நிலைமை காணப்படுகின்றது. குழந்தை களை வீட்டில் விட்டுவிட்டு செல்லமுடி யாத நிலைமை காணப்படுகின்றது. 28,000ஆயிரத்திற்கும் அதிகமான குழந்தைகள் தந்தையரை இழந்த குழந் தைகள் காப்பகங்களில் காணப்படு கின்றனர்.

அண்மையில் காப்பகத்திலிருந்து வந்த அம்மா ஒருவர் என்னிடம் சொன் னார், தங்களுடைய காப்பகத்திற்கு வருகை தந்து பார்வையிடுமாறும், காப்பகத்தில் வாழும் பெண் பிள்ளைகளை காப்பாற்று மாறும் கோரினார். கடந்த காலங்களில் காப்பகத்தில் உள்ள பெண் பிள்ளைகள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என என்னிடம் தெரிவித்தார். இதற்காக இந்த நாட்டில் பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிறுவனங்களின் தேவை பணமே தவிர மனிதாபிமானம் இல்லை. அவ்வாறான அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. – எனத் தெரிவித்தார்.